திரு. வி. ரவிச்சந்திரன் : ஆயுதக் கலாச்சாரமாக இருந்த தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை தமிழக முதலமைச்சரையே சாரும். இன்று சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர் செய்யப்பட்டு, காவல் துறை தன்னுடைய பணியை முழுமையாகச் செய்வதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

காவிரி நீர்ப் பிரச்சினையில் மத்திய அரசு, நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை எத்தகைய உணர்வுடன் வெளியிட்டதோ, அதே உணர்வுடன் தேவையான தொடர் நடவடிக்கைகளையும் எடுத்து காவிரி நீர் கிடைப்பதற்கு வழிவகுத்த எங்களது காவல் தெய்வத்தைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்தினுடைய வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்துப் பாடுபட்டுக் கொண்டு இருக்கின்ற புரட்சித் தலைவி அரசை, எதிர்க்கட்சியினர் தேவையில்லாத குறைகளையும், குற்றங்களையும் சொல்வதைத் தவிர்த்து, எந்த எண்ணத்தில் எந்த இலட்சியத்தில் இந்த அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்டதோ அந்த இலட்சியங்களுக்கும், எண்ணங்களுக்கும் ஏற்ப நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றது. அதற்கு உங்களது ஒத்துழைப்பை அளிக்க வேண்டுகிறேன். புரட்சித் தலைவி அரசு ஒரு பொற்கால அரசாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11—3—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுப் பணித் (மின்சக்தி) துறையின் 12—7—1990 ஆம் நாளிட்ட 1442 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அணு உலை நிறுவுதல் (கட்டிடங்களை ஒழுங்குமுறைப்படுத்துதல், நிலத்தைப் பயன்படுத்துதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 16(1978) 21 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY
TRUTH ALONE TRIUMPHS